**திருத்தம் செய்யப்பட்டது.**

செய்தி வெளியீடு எண்–606 நாள்–26.7.2008

## சுமை தூக்கும் தொழிலாளர்களின் கையாளுதல் கூலி ஐந்து சதவீதத்திலிருந்து பத்து சதவீதமாக உயர்வு!

## இனி மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை கையாளுதல் கூலி உயர்த்தி வழங்கப்படும்!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள், நேரடி கொள்முதல் நிலையங்கள், ரயில்வே சேமிப்பு மையங்கள் போன்றவைகளில் பணிபுரியும் சுமை தூக்கும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கையாளுதல் கூலி ஏற்கனவே கழக ஆட்சியில் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை உயர்த்தி வழங்கப்பட்டு வந்தது. இந்த நடைமுறை அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் 21.9.2001 அன்று வெளியிடப்பட்ட அரசாணையின்மூலம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் உயர்த்தப்பட வேண்டும் என்று மாற்றி அமைக்கப்பட்டது.

சுமைதூக்கும் தொழிலாளர்களின் நலன்களைப் பரிவுடன் பரிசீலனை செய்து, தற்பொழுது நடைமுறையில் உள்ள **ஐந்து சதவீத கூலி உயர்வினைப் பத்து சதவீதமாக உயர்த்தி வழங்கிடவும்,** ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கையாளுதல் கூலி உயர்த்தப்படும் என்பதை மாற்றி, இனி மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை உயர்த்தி வழங்கிடவும் முதலமைச்சர் கலைஞர் இன்று (26.7.2008) ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின் காரணமாக, ஏறத்தாழ 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுமை தூக்கும் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

***

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.